# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 110 | 4 Pages | 23.11.2023 | Thusday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 110 | 4 பக்கங்கள் | 23.11.2023 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## 50 பிணைக்கைதிகள் விடுதலை: வரவேற்பு தெரிவித்த பிரதமர் மோடி



புதுடெல்லி, நவ.23

இஸ்ரேல்பாலஸ்தீனம் இடையே போர் நிறுத்தம் ஒப்பந்தம் செய்ய அமெரிக்கா உதவியுடன் கத்தார் மத்தியஸ்தரராக செயல்பட்டு வந்தது. இருதரப்பிலும் பிணைக்கைதிகள், இஸ்ரேல் சிறையில் உள்ள பாலஸ்தீனர்கள் விடுதலை செய்ய கத்தார் பேச்சுவார்த்தை நடத்தி வந்தது.

இதற்கிடையே, ஹமாஸ் அமைப்பினர் தாங்கள் பிடித்து வைத்துள்ள 240 பிணைக்கைதிகளில் 50 பேரை விடுதலை செய்ய சம்மதம் தெரிவித்தனர். இதையடுத்து, இஸ்ரேல் மந்திரி சபை 4 நாட்கள் போர் நிறுத்தம் செய்ய ஒப்புதல் வழங்கியதால் ஹமாஸ் விரைவில் பிணைக்கைதிகளை விடுவிக்கும் என எதிர்பார்க்கலாம்.

இந்நிலையில், ஜி20 அமைப்புக்கான உச்சி மாநாட்டை இந்தியா இன்று நடத்தியது. பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் காணொலி காட்சி வழியே இந்த மாநாடு நடைபெற்றது. இதில் உறுப்பு நாடுகள், சர்வதேச அமைப்புகள் மற்றும் விருந்தினர் நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டில் பிரதமர் மோடி பேசுகையில், இஸ்ரேல் பிணைக் கைதிகள் விடுவிக்கப்பட்டது வரவேற்புக்கு உரியது. அனைத்து பிணைக்கைதிகளும் விரைவில் விடுவிக்கப்பட வேண்டும். பொதுமக்கள் எந்தப் பகுதியில் கொல்லப்பட்டாலும் அது கண்டனத்திற்குரியது. மேற்கு ஆசிய பிராந்தியத்தில் நிலவ கூடிய ஸ்திரத்தன்மையற்ற நிலை கவலை அளிக்கிறது என தெரிவித்தார்.

## அழைப்பு விடுத்த ஆக்ஸ்போர்டு ஏற்றுக்கொண்ட மம்தா பானர்ஜி



மேற்கு வங்காளம், நவ.23

இந்தியா மற்றும் அயல்நாடுகளில் உள்ள தொழிலதிபர்கள், மேற்கு வங்கத்தில் முதலீடு செய்து தொழில்துறையை ஊக்குவிக்கவும், அதன் மூலம் வேலைவாய்ப்பை அதிகரிக்கவும் அங்கு உலக வர்த்தக சந்திப்பு நடைபெறுகிறது.

மேற்கு வங்க உலக வர்த்தக சந்திப்பில் (Bengal Global Business Summit) மேற்கு வங்க முதல்வரின் தலைமை ஆலோசகர் அமித் மித்ரா, ஆக்ஸ்போர்டு துணைவேந்தரும் (provicechancellor) அறிவுசார் பரிமாற்ற துறையின் பேராசிரியருமான ஜொனாதன் மிச்சியை (Jonathan Michie) உரையாற்ற அழைத்தார்.

அப்போது ஜொனாதன் மிச்சி தெரிவித்ததாவது:

இனவெறிக்கு எதிராகவும் சமூக அமைதியை நிலைநாட்டவும் மம்தா பானர்ஜி மேற்கொள்ளும் முயற்சிகள் எங்களை நெகிழ செய்துள்ளது. அடுத்த வருடம் ஜூன் மாதம், எங்கள் பல்கலைக்கழகத்திற்கு அவர் வருகை தந்து தனது வாழ்நாளில் பட்ட துன்பங்களையும், போராட்டங்களையும், அதை தாண்டிய அவரது சாதனைகளையும் குறித்து உரையாற்ற அழைத்தோம். ஆக்ஸ்போர்டில் இந்தியர்கள் பலர் கல்வி பயில்வதால், மம்தாவின் உரை எங்கள் மாணவ மாணவியர்களாலும், பேராசிரியர்களாலும் மிகவும் விரும்பப்படும். எங்கள் அழைப்பை அவர் ஏற்று கொண்டுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறேன்.

இவ்வாறு மிச்சி கூறினார்.

தென்மேற்கு இங்கிலாந்தின் ஆக்ஸ்போர்டுஷையர் (Oxfordshire) பிராந்தியத்தில் உள்ளது ஆக்ஸ்போர்டு (Oxford) நகரம். உலக புகழ் பெற்ற ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் (Oxford University) இந்நகரத்தில் உள்ளது. தொன்மை வாய்ந்த இப்பல்கலைக்கழகம், 900 ஆண்டுகளுக்கு முன்பே உருவாக்கப்பட்டது.

ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் 38 கல்லூரிகள் இணைந்துள்ளன. அவற்றில் உலகின் பல பகுதிகளில் இருந்து 22 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றனர். பல்வேறு ஆய்வுகளுக்காக 70 துறைகள் அங்கு இயங்குகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜம்மு காஷ்மீர் என்கவுண்டர்: 4 ராணுவ வீரர்கள் வீர மரணம்



ஜம்மு, நவ.23

ஜம்மு காஷ்மீரில் உள்ள ரஜோரி மாவட்டத்தில் பயங்கரவாதிகள் பதுங்கி இருப்பதாக பாதுகாப்புப் படைவீரர்களுக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து, பாதுகாப்புப் படைவீரர்கள் அப்பகுதிக்குச் சென்றனர். அவர்களைக் கண்டதும் மறைந்திருந்த பயங்கரவாதிகள் துப்பாக்கியால் சரமாரியாக சுட்டனர். இருதரப்புக்கும் இடையே பயங்கரதுப்பாக்கி சண்டை நடந்தது.

இந்த தாக்குதலில் 4 ராணுவ வீரர்கள் வீர மரணம் அடைந்தனர். அவர்களில் 2 பேர் வீரர்கள் மற்றும் 2 அதிகாரிகளும் அடங்குவர்.

இதையடுத்து அப்பகுதியில் மறைந்துள்ள பயங்கரவாதிகளைப் பிடிக்க தேடுதல் வேட்டை நடந்து வருகிறது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மழைநீரை சேமிப்பதற்காக மாணவர்கள் உருவாக்கிய குளம்



திருப்பூர், நவ.23

திருப்பூர் சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்டம் அலகு2 மாணவர்கள் மழை நீரை சேமிப்பதற்காக கல்லூரி வளாகத்தில் குளம் ஒன்றை வெட்டி அதற்கு என்.எஸ்.எஸ் குளம் என்று பெயரிடப்பட்டது. இந்தநிலையில் திருப்பூர் மாநகரில் நேற்று இரவு முதல் இன்று காலை வரை பெய்த மழையால் குளம் நிரம்பி காணப்படுகிறது. இந்த மழை சீசனில் மூன்றாவது முறையாக குளம் நிரம்பியது மகிழ்ச்சியாக இருக்கிறது என்று கல்லூரி முதல்வர் கிருஷ்ணன் மற்றும் அலகு2 ஒருங்கிணைப்பாளர் மோகன்குமார் தெரிவித்தனர். அலகு2மாணவர்கள்உட்படஅனைத்துமாணவர்களும் ஆர்வத்தோடு குளம் நிரம்பி உள்ளதை செல்பி புகைப்படம் எடுத்து மகிழ்ந்தனர்.



அமைச்சர்கள் சாமிநாதன், சுப்பிரமணியன், கயல்விழி செல்வராஜ் ஆகியோர் திருப்பூர் மாவட்டம் பெருமாநல்லூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவம் மற்றும் நல்வாழ்வுத்துறையின் சார்பில் 9 புதிய மருத்துவ கட்டடங்களை திறந்து வைத்து கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கினார்.


## இன்று சுபமுகூர்த்தம் சார்பதிவாளர் அலுவலகத்தில் கூடுதல் டோக்கன் ஒதுக்கீடு செய்ய உத்தரவு

சென்னை, நவ.23

சுபமுகூர்த்த தினமான இன்று (நவம்பர் 23ம் தேதி) ஆவண பதிவுகள் அதிக அளவில் நடைபெறும் என்பதால் சார்பதிவாளர் அலுவலகத்தில் கூடுதல் டோக்கன் ஒதுக்கீடு செய்ய செயலாளர் ஜோதி நிர்மலா சாமி உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து பதுவுத்துறை செயலர் கூறியதாவது:

அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் சுபமுகூர்த்த தினங்களில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று ஆவணப் பதிவுக்காக கூடுதல் முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யப்படுவது வழக்கம்.





அந்த வகையில் சுபமுகூர்த்த தினமாக கருதப்படும் எதிர்வரும் 23.11.2023 அன்று அதிகளவில் பத்திரப் பதிவுகள் நிகழும் என எதிர்பார்க்கப்படுவதால் அன்றைய தினம் கூடுதலாக முன்பதிவு வில்லைகள் வழங்கப்பட வேண்டும் என பதிவுத்துறைக்கு உத்திரவிடப் பட்டுள்ளது.

அதனடிப்படையில் ஒரு சார்பதிவாளர் உள்ள அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 முன்பதிவு வில்லைகளும் இரண்டு சார்பதிவாளர்கள் உள்ள அலுவலகங்களுக்கு 200க்கு பதிலாக 300 முன்பதிவு வில்லைகளும் அதிகளவில் ஆவணப்பதிவுகள் நடைபெறும் 100 அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 சாதாரண முன்பதிவு வில்லைகளோடு ஏற்கெனவே வழங்கப்படும் 12 தட்கல் முன்பதிவு வில்லைகளுக்கு கூடுதலாக நான்கு தட்கல் முன்பதிவு வில்லைகளும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்படும்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டிருந்தார்.

## திருச்செந்தூர் அருகே சாலை விபத்தில் மூளைச்சாவு அடைந்த ஆசிரியர் உடல் உறுப்புகள் தானம்

திருச்செந்தூர், நவ.23

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அருகே உள்ள கீழநாலுமூலைக்கிணறு வடக்கு தெருவை சேர்ந்த தங்கபெருமாள் மகன் சதீஷ் (வயது33). இவர் பணிக்கநாடார் குடியிருப்பில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளியில் ஆசிரியராக பணி புரிந்து வந்தார். இவருக்கு திருமணமாகி 6 மாத ஆண்குழந்தை உள்ளது.

சதீஷ்குமார் பள்ளிக்கு, பள்ளி வாகனத்தில் செல்வது வழக்கம். இந்நிலையில் நேற்று முன்தினம் தனது மோட்டார் சைக்கிளில் பள்ளிக்குச் சென்றுள்ளார். வேலை முடிந்த பின்னர் பரமன்குறிச்சி வழியாக மோட்டார் சைக்கிளில் வீட்டுக்கு திரும்பி சென்றார். அவர் நடுநாலுமூலைக்கிணறு பகுதியில்





சென்ற போது மாடு குறுக்கே வந்துள்ளது. அப்போதுநிலைதடுமாறிய சதீஷ்குமார் சாலையில் கீழே விழுந்தார். இதில் தலையில் பலத்த காயமடைந்த அவரை அங்கிருந்தவர்கள் மீட்டு திருச்செந்தூர் அரசு மருத்துவனைக்கு கொண்டு சென்றனர். பின்னர் மேல் சிகிச்சைக்காக நெல்லை அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு பரிசோதித்த மருத்துவர்கள் சாலை விபத்தில் தலையில் பலத்த காயமடைந்ததால் மூளையில் ரத்தக்கசிவு ஏற்பட்டு மூளை செயலிழந்து விட்டதாக தெரிவித்தனர். இதனையடுத்து அவரது குடும்பத்தினர் சதீஷின் உடல் உறுப்புகளை தானமாக வழங்க முடிவு செய்தனர். நெல்லை மருத்துவமனையில் அவரது இதயம், கண்கள், நுரையீரல், சிறுநீரகம் உள்ளிட்ட உறுப்புகள் தானமாக வழங்கப்பட்டது. அவரது இதயம் மதுரையில் இருந்து விமானம் மூலம் சென்னைக்கு எடுத்து செல்லப்பட்டது. தமிழ்நாடு அரசு கடந்த சில மாதங்களுக்கு முன்னர் உடல் உறுப்புகள் தானத்தை வலியுறுத்தி, மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் உடல் உறுப்புகள் தானம் செய்பவர்கள் உடல் அரசு மரியாதையுடன் தகனம் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது. இந்நிலையில் தற்போது உடல் உறுப்புகள் தானம் எண்ணிக்கை அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.


## வீட்டுக்குள் நுழைய முயன்ற பாம்பை தடுத்து நிறுத்திய வளர்ப்பு பூனை: சமூக வலைதளத்தில் வீடியோ வைரல்

கோவை, நவ.23

கோவை கவுண்டம்பாளையம், சரவணாநகரை சேர்ந்தவர் விஜர். இவர் தனது வீட்டில் பூனை ஒன்றை வளர்த்து வருகிறார். இந்தநிலையில் விஜர் குடும்பத்தினர் சம்பவத்தன்று வீட்டில் ஒன்றாக அமர்ந்து பேசிக்கொண்டு இருந்தனர்.

அப்போது விஜர் வீட்டு வளாகத்தில் நாகப்பாம்பு ஒன்று புகுந்தது.

தொடர்ந்து அந்த பாம்பு வீட்டுக்குள் நுழைய முயன்றது. இதற்கிடையே அங்கு நின்றிருந்த வளர்ப்பு பூனை தற்செயலாக நாகப்பாம்பை பார்த்தது. அது உடனடியாக பாம்பை நோக்கி



சீறிக்கொண்டு வந்தது. இருந்தபோதிலும் அந்த பாம்பு வீட்டுக்குள் நுழைவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வந்தது. வீட்டு வாசலில்பூனையின் சீறலைதற்செயலாக கேட்ட விஜர் குடும்பத்தினர் உடனடியாக அங்கு வந்து பார்த்தனர். அப்போது நாகப்பாம்பு வீட்டுக்குள்நுழைய முயல்வதும், இதனை வளர்ப்புப்பூனை சீறியபடி தடுக்க முயல்வதும் தெரியவந்தது.

இதனை பார்த்து அதிர்ச்சி அடைந்த குடும்பத்தினர், உடனடியாக வீட்டுக்கதவை மூடினர். சத்தம் கேட்டு அக்கம்பக்கத்தினர் அங்கு திரண்டு வந்தனர். பாம்புவீட்டுக்குள்நுழைய முயல்வதையும், அதனை பூனை தடுத்து நிறுத்துவதையும் கண்டு அதிர்ச்சி அடைந்த அவர்கள் அந்த காட்சியை செல்போனில் படம் பிடித்தனர்.

பூனையின் எதிர்ப்பால் பாம்பு அடங்கி அங்கிருந்து வெளியேறிச் சென்றது. இந்தகாட்சிகளைவீடியோ எடுத்த சிலர் அதனை இணையத்தில் பரப்பினர். தற்போது சமூகவலைதளத்தில் அந்த காட்சிகள் வைரலாக பரவி வருகிறது

## சென்னையில் 15 காவல் ஆய்வாளர்கள் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றம்



சென்னை, நவ.23

சென்னையில் 15 காவல் ஆய்வாளர்கள் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக சென்னை காவல் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர் அதிரடி உத்தரவை பிறப்பித்துள்ளார்.

கஞ்சா, குட்கா போன்ற போதைப் பொருள் புழக்கத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல் இருந்ததாக கூறி சென்னை காவல் ஆணையர் உத்தரவிட்டுள்ளார்.

ஏற்கனவே 6 உதவி ஆய்வாளர்கள், 2 தலைமை காவலர்கள் மற்றும் 14 காவலர்கள் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், அடுத்தடுத்து எடுக்கப்படும் நடவடிக்கையால் காவல் துறையில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

# சேலம் இளைஞர் அணி கூட்டம்: உதயநிதி சொன்ன குட்டி கதை



சேலம், நவ.23

சேலம் பெத்தநாயக்கன் பாளையத்தில் அடுத்த மாதம் 17ந்தேதி தி.மு.க. இளைஞரணி 2வது மாநில மாநாடு நடைபெறுகிறது. இதையடுத்து தி.மு.க. இளைஞரணி செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஒவ்வொரு மாவட்டமாக சென்று இளைஞரணி செயல்வீரர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசி வருகிறார்.

அதேபோல் சேலம் சீலநாயக்கன்பட்டி பகுதியில் இன்று நடந்த ஒருங்கிணைந்த மாவட்ட இளைஞரணி செயல்வீரர்கள் கூட்டத்தில் தி.மு.க. மாநில இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது:

இளைஞர் அணி மாநாட்டை வெற்றி பெற செய்கின்ற பொறுப்பு மற்ற மாவட்டத்தை விட சேலம் மாவட்டத்திற்கு அதிகம் உண்டு என்பதை நீங்கள் உணர வேண்டும். இது வெறும் செயல்வீரர்கள் கூட்டம் அல்ல, மாநாட்டிற்கான முன்னோட்டம். நம்முடைய இளைஞர் அணிக்கு பல்வேறு பெருமைகள் இருக்கிறது. இளைஞர் அணியின் வரலாற்றை எல்லாம் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இன்றைக்கு பல்வேறு இயக்கங்களில் இளைஞர் அணி இருக்கிறது. பல அணிகளும் இருக்கிறது. ஆனால் இந்தியாவிலேயே 1980ம் ஆண்டு முதன் முறையாக ஒரு இயக்கத்திற்கு இளைஞர் அணி என ஆரம்பித்தது தி.மு.க. தான். இதை தொடங்கி வைத்தவர் நம்முடைய கழக தலைவர் தான்.

அதுபோல் தி.மு.க.வில் பல அணிகள் உள்ளது. அதவாது 22 அணிகள் இருக்கிறது. ஆனால் அணிகள் இருந்ததும் அதில் முதன்மையான அணி எதுவென்றால் இளைஞர் அணி என்று கலைஞரால் பலமுறை பாராட்டப்பட்டது.

தற்போது நம்முடைய தலைவர் மு.க.ஸ்டாலின் இளைஞரணி செயலாளராக இருந்து முதலமைச்சராக இருக்கிறார் என்றால் அவருடைய உழைப்பு எப்படி பட்டது என்பதை நீங்கள் உணர வேண்டும். இளைஞரணி மன்றத்தை கோபாலபுரத்தில் தொடங்கிய நம்முடைய தலைவர் படிப்படியாக உழைத்து இன்று தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக, கழக தலைவராக உட்கார்ந்து இருக்கிறார் என்றால் அவருடைய உழைப்பு தான் அதற்கு காரணம். அதற்கு அடித்தளமாக அமைந்திருப்பது நம்முடைய இளைஞரணி என்பதை நீங்கள் உணர வேண்டும். இளைஞர் அணியினர் உழைத்தால் நிச்சயம் அங்கீகாரம் கிடைக்கும்.

செயல்வீரர்கள்னா யார்? தலைவர் என்ன சொல்கிறாரோ, தலைமை என்ன சொல்கிறதோ அதை களத்தில் இறங்கி செஞ்சி முடிப்பவன் தான் உண்மையான செயல்வீரன். அதனால் தான் இந்த கூட்டத்திற்கு பெயர் செயல்வீரர்கள் கூட்டம். தன்னுடைய சுய நலன் பார்க்காமல் கட்சி நலனுக்காக தலைமை சொல்லிவிட்டது, தலைவர் சொல்லி விட்டார் என உத்தரவை ஏற்று களத்தில் இறங்கி அதை முதன் முதலில் செஞ்சி முடிக்கிறவன் தான் உண்மையான செயல்வீரன்.

இந்த மேடையில் இருக்க கூடிய உண்மையான முதல் செயல்வீரர் யார்? அது நம்முடைய முதன்மை செயலாளர் நேரு. அவருக்கு துணை நிற்பவர்கள்தான் மாவட்ட செயலாளர்கள் 3 பேரும். இங்கு இருக்கக்கூடிய அனைவரும் உண்மையான செயல்வீரர்கள். எனவே தலைமை சொல்வதை களத்தில் இறங்கி செஞ்சி முடிப்பது நம்முடைய கடமை.

உழைத்தால் யாரும் முன்னேறலாம் என்பதற்கு நம்முடைய இளைஞர் அணியே சாட்சி. அதற்கு நம்முடைய தலைவரே சாட்சி. உழைப்பு என்றால் ஸ்டாலின், ஸ்டாலின் என்றால் உழைப்பு என்று பாராட்டப்பட்டவர் தான் நம்முடைய தலைவர் அவர்கள்.

14 வயதில் 1967ம் ஆண்டு கோபாலபுரத்தில் ஒரு முடிதிருத்தும் கடையில் இளைஞர் தி.மு.க.வை தொடங்கினார்கள். அதன் பிறகு 1968ல் சென்னை மாநகராட்சி தேர்தலுக்காக சென்னை முழுவதும் சைக்கிள் பிரசாரம் செய்தார். 1969ம் ஆண்டு சென்னை மாவட்டத்தினுடைய வார்டு பிரதிநிதி, 1973ம் ஆண்டு தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர். 1976ம் ஆண்டு மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு கடுங்காவல் தண்டனை.

1980ம் ஆண்டு தி.மு.க. இளைஞரணி ஆரம்பிக்கும்போது 7 அமைப்பாளர்களில் ஒருவர். கடின உழைப்பால் நம்முடைய தலைவர் முதலமைச்சர் ஆகியுள்ளார்.

பா.ஜனதா ஆட்சிக்கு வந்து 9 வருடங்கள் ஆகி விட்டது. 2014ம் ஆண்டு தேர்தல் பிரசாரத்தில் பிரதமர் நரேந்திர மோடி ஒரு வாக்குறுதி கொடுத்தார். இந்தியாவை 2020ம் ஆண்டுக்குள் வல்லரசு நாடாக மாற்றி காட்டுவேன் என்று சொன்னார். இப்போது மீண்டும் அதே வாக்குறுதியை கொடுக்கிறார். 2047ம் ஆண்டுக்குள் இந்தியாவை வல்லரசு நாடாக மாற்றி காட்டுவேன் என்று சொல்கிறார். ஒரு விசயத்தில் மட்டும் பிரதமர் நரேந்திர மோடியை பாராட்டியாக வேண்டும். ஒரு வாக்குறுதி கொடுத்தார். இந்தியாவை மாற்றி காட்டுவேன் என்றார். இதை மட்டும் செய்து விட்டார். என்னவென்று கேட்டால் அவர் இந்தியா பெயரை பாரத் என மாற்றி விட்டார். தன்னுடைய சொல்லை காப்பாற்றி விட்டார் என சொல்கின்றார். சி.ஏ.ஜி. என்கிற அமைப்பு மத்திய, மாநில அரசுகளின் செலவு கணக்கை தணிக்கை செய்யும் அமைப்பு ஆகும். இந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் மத்திய அரசில் ரூ.7½ லட்சம் கோடிக்கு கணக்கு இல்லை எனவும், மத்திய அரசின் மருத்துவ காப்பீடு திட்டத்தில் இறந்து போன 88 ஆயிரம் பேருக்கு பணம் வழங்கப்பட்டு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டு உள்ளது. இது குறித்து தொடர்ந்து நம்முடைய தலைவர் கேள்வி கேட்டுக்கொண்டு இருக்கிறார்.

ஆனால் மத்திய பா.ஜனதா அரசு பதில் சொல்லாமல் அந்த சி.ஏ.ஜி. அறிக்கை தயார் செய்த அத்தனை அதிகாரிகளையும் பணியிட மாற்றம் செய்து விட்டார்கள்.


நம்முடைய மாநாட்டின் பெயர் மாநில உரிமைகள் மீட்பு மாநாடு. கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் விட்டு கொடுத்த நம்முடைய உரிமைகள் அத்தனையும் மீட்க வேண்டும்.

தமிழ்நாட்டில் இருந்து வரி வருவாயாக மத்திய அரசுக்கு ரூ.5 லட்சம் கோடி சேர்ந்துள்ளது. அதில் ரூ.2 லட்சம் கோடி மட்டுமே திருப்பி தரப்பட்டுள்ளது. ஆனால் உத்தரபிரதேசத்தில் ரூ.3 லட்சம் கோடி வருவாய் சென்றுள்ள நிலையில் ரூ.9 லட்சம் கோடி அந்த மாநிலத்திற்கு திருப்பி கொடுத்துள்ளது.

பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் வருகிற பாராளுமன்ற தேர்தலில் இந்தியா கூட்டணி வெற்றி பெறுவது உறுதி. செயல்வீரர்கள் அனைவரும் அதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

கூட்டத்தில் பேசிய அமைச்சர் உதயநிதி, பூட்டை உடைக்க சுத்தியல் பலமுறை அடித்தும் திறக்கவில்லை, சாவி எளிதாக பூட்டை திறந்தது. சுத்தியலிடம் சாவி சொன்னது நீ பூட்டின் தலையில் தட்டினாய், நான் பூட்டின் இதயத்தை தொட்டேன் என்று. இதில் பூட்டு என்பது தமிழ்நாடு. சுத்தியல் ஒன்றிய பா.ஜ.க. அரசு. மக்களின் இதயத்தை தொடும் சாவி தி.மு.க. என குட்டிக்கதை சொன்னார்.




அமைச்சர்கள் சாமிநாதன் திருப்பூர் மாவட்டம் வெள்ளக்கோவில் நகராட்சி ஜே.கே.கே. மஹாலில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் வெள்ளக்கோவில் நகராட்சி பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

# தருமபுரி நீதிமன்றத்தில் சொத்து குவிப்பு வழக்கில் அதிமுக., முன். அமைச்சர் கே.பி.அன்பழகன் ஆஜர்

தருமபுரி, நவ.23

கடந்த அ.தி.மு.க., ஆட்சியில் முன்னாள் அமைச்சர் கே.பி. அன்பழகன் வருமானத்திற்கு அதிகமாக சொத்துக்களை வாங்கி குவித்திருப்பதாக லஞ்ச ஒழிப்பு போலீசார் வழக்கு பதிவு செய்தனர். அதற்காக அவர் மீது 10 ஆயிரம் பக்கங்கள் அடங்கிய குற்றப்பத்திரிக்கையினை தருமபுரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தனர்.



இதனை தொடர்ந்து நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை கடந்த 6ம் தேதி தொடங்கியது. 2 வது முறையாக அ.தி.மு.க முன்னாள் அமைச்சர் கே.பி.அன்பழகன், அவரது மனைவி மல்லிகா, மகன்கள் சசிமோகன், சந்திரமோகன், உறவினர்கள், சரவணன், சரவணக்குமார், மாணிக்கம், தனபால் உள்ளிட்ட 11 பேரும் விசாரணைக்காக நீதிமன்றத்தில் ஆஜரானர். அவர்களிடம் சில கேள்விகளை நீதிபதி கேட்டார். பின்னர் வழக்கு விசாரணையை வரும் டிசம்பர் 8ந்தேதிக்கு நீதிபதி ஒத்தி வைத்தார்.

# புத்தேரி ஏரியில் நுரையாக வெளியேறும் தண்ணீரை வலைபோட்டு மறைத்த அதிகாரிகள்



தாம்பரம், நவ.23

பல்லாவரம் அடுத்த துரைப்பாக்கம் 200 அடி சாலை அருகே புத்தேரி ஏரி உள்ளது. இந்த ஏரியில் இருந்து வெளியேறும் தண்ணீர் பல்லாவரம் பெரியஏரி, கீழ்கட்டளை ஏரி, நாராயணபுரம் ஏரி, பள்ளிக்கரணை சதுப்பு நிலம் பகுதிக்கு செல்லும்.

புத்தேரி ஏரி தண்ணீரில் அதிக அளவு ரசாயன கழிவு நீர் கலப்பதாக கூறப்படுகிறது. இதன் காரணமாக ஏரியில் இருந்து உபரி நீர் செல்லும் பாதையில் தண்ணீர் நுரையாக வெளியேறி வருகிறது. ரசாயன கழிவு நீர் கலப்பே இதற்கு காரணம் என்று சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டி உள்ளனர்.

பல்லாவரத்தை சுற்றி ஏராளமான லெதர் தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன. இதேபோல் புத்தேரி ஏரியை சுற்றிலும் குடியிருப்புகள் அதிகம் உள்ளது. இங்கிருந்து வெளியேறும் கழிவுநீர் ஏரியில் கலந்து வருவதாக கூறப்படுகிறது.

இதற்கிடையே உபரிநீர் வெளியேறும் கால்வாய் அருகே செல்லும் பாதை ரேடியல் சாலையை இணைக்கும் சாலையாக உள்ளது. இதனால் அவ்வழியே வாகன போக்குவரத்து அதிகம் இருக்கும். ஏரியில் இருந்து வெளியேறும் நுரை தண்ணீர் காற்றில் பறந்து வந்தது. இதையடுத்து தண்ணீர் நுரை காற்றில் பறந்து வாகன ஓட்டிகள் மற்றும் அவ்வழியே செல்லும் பொதுமக்கள் மீது விழுவதை தடுக்கும் வகையில் உபரிநீர் வெளியேறும் கால்வாய் பகுதியை வலையால் அதிகாரிகள் மூடி உள்ளனர். மேலும் ஏரியின் கரையோரத்தில் காண ப்படும் ஆகாயதாமரை செடிகளையும் அகற்றும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டு வருகிறார்கள்.

இந்த நிலையில் புத்தேரி ஏரியில் தண்ணீரின் பாதிப்பை அறிய அதன் மாதிரியை மாசுகட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் எடுத்து உள்ளனர். இதுகுறித்து தாம்பரம் மாநகராட்சி கமிஷனர் அழகு மீனா கூறும்போது, புத்தேரி ஏரியில் தண்ணீர் மாசு பற்றி புகார்கள் வந்து உள்ளன.

இதுபற்றி சரியான காரணம் இன்னும் தெரியவில்லை. தற்போது இது தீவிரமான பிரச்சினையாக மாறவில்லை. எனினும் தண்ணீரின் தண்மை குறித்து அறிய மாசுகட்டுப்பாட்டு அதிகாரிகள் மாதிரிகளை சேகரித்து பரிசோதனைக்கு அனுப்பி உள்ளனர். அவர்கள் அளிக்கும் பரிசோதனை முடிவை வைத்து அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# சென்னை ரெயிலில் திடீர் புகை பயணிகள் அதிர்ச்சி



ஆவடி, நவ.23

திருவனந்தபுரத்தில் இருந்து சென்னை சென்ட்ரலுக்கு எக்ஸ்பிரஸ் ரெயில் புறப்பட்டு வந்தது. அந்த ரெயில் இன்று காலை 8 மணியளவில் ஆவடி அருகே வரும் போது ஏ.சி. பெட்டியில் இருந்து புகை வந்தது. இதை பார்த்த பயணிகள் அபாய சங்கிலியை இழுத்த னர்.

ரெயில் நெமிலிச்சேரி நிலையத்தில் நிறுத்தப்பட்டது. தொழில் நுட்ப பணியாளர்கள் உடனே அந்த பெட்டிக்குள் சென்று மின்சார வினியோகத்தை துண்டித்தனர்.

இதற்கிடையே பெட்டியில் இருந்து புகை வந்ததை பார்த்த பயணிகள் ரெயில் நின்றதும் இறங்கி ஓடி னார்கள். அதிர்ச்சியில் உறைந்த பயணிகள் தப்பி ஓடும் வகையில் உடமைகளை இறக்கினார்கள். ஏ.சி. பெட்டிக்கு வரக்கூடிய மின்சாரத்தில் ஏற்பட்ட கோளாறால் புகை ஏற்பட்ட தாக கூறப்படுகிறது சரியான நேரத்தில் புகை வருவதை கண்ட பயணிகள் ரெயிலை நிறுத்தி மின்சார வினியோகத்தை துண்டித் தனர். இதனால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது. இதையடுத்து மீண்டும் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் ரெயில் சென்ட்ரலுக்கு புறப்பட்டு சென்றது. இந்த சம்பவத்தால் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.



அமைச்சர்கள் சாமிநாதன், கயல்விழி செல்வராஜ் திருப்பூர் மாநகராட்சி முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி பேருந்தி நிலையத்திற்கு முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு வருகை புரிந்து முத்தமிழ்த்தேர் அலங்கார ஊர்தியினை மலர்தூவி வரவேற்றார்கள்.

# கூட்டாளி கொலை வழக்கில் வரிச்சியூர் செல்வத்துக்கு நிபந்தனை ஜாமின்: மதுரை ஐகோர்ட் உத்தரவு



மதுரை, நவ.23

விருதுநகர் அல்லம்பட்டியை சேர்ந்தவர் செந்தில் குமார் (வயது 38). இவர், தனது மனைவி, குழந்தைகளுடன் மதுரையில் தங்கியிருந்தார். பிரபல ரவுடி வரிச்சியூர் செல்வத்தின் கூட்டாளியாகவும் செயல்பட்டு வந்துள்ளார்.

கடந்த 2020ம் ஆண்டு மதுரை டி.குன்னத்தூர் ஊராட்சி தலைவர் கிருஷ்ண ராஜ், நண்பர் முனியசாமி ஆகிய 2 பேர் கொல்லப்பட்ட வழக்கில் செந்தில்குமாரும் குற்றவாளியாக சேர்க்கப்பட்டார்.

இதனை அறிந்த வரிச்சியூர் செல்வம் அறிவுறுத்தலின் பேரில் செந்தில்குமார் சென்னை சென்றுவிட்டார். அங்கு இருந்த செந்தில்குமார் திடீரென மாயமாகி விட்டதாகவும் அவரை கண்டுபிடிக்க கோரியும் அவரது மனைவி விருதுநகர் கிழக்கு போலீசில் புகார் செய்தார்.

அவரை போலீசார் தீவிரமாக தேடினர். அப்போது அவரை வரிச்சியூர் செல்வத்தின் கூட்டாளிகள் சுட்டுக்கொன்று, அவரது உடலை தாமிரபரணி ஆற்றில் வீசியது தெரிந்தது. இதுசம்பந்தமாக போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். இதில் பலர் கைதாகியுள்ளனர்.

தற்போது இந்த வழக்கில் கைதாகி சிறையில் அடைக்கப்பட்டு உள்ள வரிச்சியூர் செல்வம், தனக்கு ஜாமின் கேட்டு மதுரை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்திருந்தார். அந்த மனு நீதிபதி சிவஞானம் முன்பு இன்று விசாரணைக்கு வந்தது.

முடிவில், மனுதாரருக்கு ஜாமின் அளிக்கப்படுகிறது. அவர் மாதந்தோறும் சம்பந்தப்பட்ட போலீசில் ஆஜராகி கையெழுத்து போட வேண்டும் என்று நிபந்தனையும் விதித்து நீதிபதி உத்தரவிட்டார்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# சூறாவளி சுற்றுப்பயணத்துக்கு தயாராகும் எடப்பாடி பழனிசாமி



சென்னை, நவ.23

அ.தி.மு.க. பூத் கமிட்டி, இளைஞர் பாசறை, இளம் பெண்கள் பாசறை மற்றும் மகளிர் அமைப்புகளின் களப்பணி குறித்த மாவட்டப் பொறுப்பாளர்கள், மாவட்டச் செயலர்களின் ஆலோசனைக் கூட்டம் சென்னை ராயப்பேட்டையில் உள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

கூட்டத்துக்கு அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமை வகித்தார். அவைத் தலைவர் தமிழ்மகன் உசேன், பொருளாளர் திண்டுக்கல் சீனிவாசன், மூத்த நிர்வாகிகள் கே.பி. முனுசாமி, நத்தம் விஸ்வநாதன், எஸ்.பி.வேலுமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முன்னாள் அமைச்சர்கள் கே.ஏ.செங்கோட்டையன், தங்கமணி, டி.ஜெயக்குமார், ஓ.எஸ்.மணியன் உள்பட மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் பங்கேற்றனர்.

சுமார் ஒரு மணி நேரம் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மாவட்டச் செயலர்களிடம் பூத் கமிட்டி அமைக்கும் பணி தொடர்பாக எடப்பாடி பழனிசாமி கேட்டறிந்தார். ஒவ்வொரு மாவட்டச் செயலாளர்களும், பொறுப்பாளர்களும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதி நிலவரம் குறித்து எடுத்துக் கூறினர்.

அதைத் தொடர்ந்து எடப்பாடி பழனிசாமி பேசியதாவது:

பூத் கமிட்டி அமைக்கும் பணிகளில் சுணக்கம் காட்டக்கூடாது. சுணக்கம் காட்டுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். பூத் கமிட்டி அமைக்கும் பணிகளை டிசம்பர் 3ந்தேதி முடித்துவிட வேண்டும். அதன்பிறகு 2024ம் ஆண்டிற்கான பாராளுமன்ற தேர்தல் பணியில் தீவிரம் காட்ட வேண்டும்.

சிறுபான்மையினர் பிரச்சனைகளுக்கு மாவட்டச் செயலாளர்கள் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். சிறுபான்மையினர் பங்களிப்பையும் கட்சியில் அதிகரிக்கச் செய்ய வேண்டும்.

எப்போதுமே கட்சிக்கு நேர்மையாக உழைப்பவர்களுக்கு உயர்வு நிச்சயம். அதே நேரத்தில் துரோகம் செய்தவர்கள் எப்படி இருக்கிறார்கள் நாம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். அவர்களால் அ.தி.மு.க. கரை வேட்டியை கூட கட்ட முடியவில்லை.

சிறுபான்மையினர் நம்மை தேடி வருவதை பார்த்து தி.மு.க.வுக்கு பயம் வந்துவிட்டது. அதனால்தான் பாரதிய ஜனதா கூட்டணியில் நாம் மறைமுகமாக இருப்பதாக பொய்யான தகவல்களை பரப்பி வருகிறார்கள்.

எனவே பாரதிய ஜனதா கூட்டணியில் அ.தி.மு.க. இல்லை என்பதை மக்களிடம் தெள்ளத்தெளிவாக எடுத்துக் கூறுங்கள். சிறுபான்மையினரை கவரும் வகையில் அவர்கள் நடத்தும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுங்கள். கட்சியிலும் சிறுபான்மையினருக்கு முக்கியத்துவம் அளித்து மாவட்ட செயலாளர்கள் செயல்பட வேண்டும்.

பாராளுமன்ற தேர்தலை மனதில் வைத்து அனைவரும் பணியாற்றுங்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

பாராளுமன்ற தேர்தல் நெருங்க உள்ள நிலையில், தமிழகம் முழுவதும் எடப்பாடி பழனிசாமி சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொள்வது எனவும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. ஜனவரி முதல் சுற்றுப்பயணத்தை எடப்பாடி பழனிசாமி தொடங்க உள்ளார் என்று அ.தி.மு.க. மூத்த தலைவர்கள் தெரிவித்தனர்.

சில அ.தி.மு.க. தலைவர்கள் கூறுகையில், "எடப்பாடி பழனிசாமி அடுத்த மாதம் (டிசம்பர்) தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணத்தை தொடங்க உள்ளார். 39 பாராளுமன்ற தொகுதிகளிலும் அவர் தீவிர பிரசாரத்தில் ஈடுபடுவார்" என்றனர்.

இதற்கிடையே தமிழகம் முழுவதும் சிறுபான்மையினர் வாக்குகளை முன்பு போல கணிசமான அளவுக்கு பெற வேண்டும் என்பதில் அ.தி.மு.க. தலைவர்கள் தீவிரமாக உள்ளனர். இதை கருத்தில் கொண்டு தான் பாரதிய ஜனதாவுடன் உள்ள உறவை அ.தி.மு.க. துண்டித்தது. 6 ஆண்டுகள் பா.ஜ.க.வுடன் உறவில் இருந்த போது அ.தி.மு.க. வசம் இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்களின் ஆதரவு கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து போய் விட்டது.

அந்த சிறுபான்மையினர் வாக்குகளை மீண்டும் பெறும் வகையில் தற்போது அ.தி.மு.க.வில் புதிய திட்டங்கள் தீட்டப்பட்டு உள்ளன. அதன் முதல் கட்டமாக முஸ்லிம் அமைப்புகளுக்கு அ.தி.மு.க. அழைப்பு விடுத்தது. அதன் பேரில் இஸ்லாமிய தலைவர்கள் எடப்பாடி பழனிசாமியை சந்தித்து பேசினார்கள். அ.தி.மு.க.வுக்கு தங்களது ஆதரவை தெரிவித்தனர்.

அடுத்த கட்டமாக விரைவில் இஸ்லாமிய அமைப்புகள் அனைத்தும் ஒருங்கிணைந்து மிக பிரமாண்டமான மாநாடு ஒன்றை நடத்த உள்ளன. அந்த மாநாட்டில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமியை பங்கேற்க செய்யும் முயற்சிகளும் நடந்து வருகின்றன.

அப்போது இஸ்லாமியர்களுக்கு சாதகமான பல்வேறு அறிவிப்புகளை எடப்பாடி பழனிசாமி வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா தலைமையில் அ.தி.மு.க. இயங்கிய போது அந்த கட்சி மீது இஸ்லாமியர்கள் எந்த அளவுக்கு பாசத்துடன் இருந்தார்களோ அதே பாசத்தை மீண்டும் பெறும் வகையில் எடப்பாடி பழனிசாமியின் அறிவிப்புகள் இருக்கும் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.

அடுத்தகட்டமாக கிறிஸ்தவ அமைப்புகளையும் அ.தி.மு.க. பக்கம் கொண்டு வரும் முயற்சிகள் திரைமறைவில் ரகசியமாக நடந்து வருகின்றன. அ.தி.மு.க. தலைமைக் கழக செயலாளர் எஸ்.பி. வேலுமணி முயற்சியில் கிறிஸ்தவ தலைவர்கள் பலர் அ.தி.மு.க.வுக்கு ஆதரவாக செயல்பட முன் வந்துள்ளனர். அவர்கள் ஒவ்வொருவராக எடப்பாடி பழனிசாமியை சந்தித்து பேசி வருகிறார்கள்.

நேற்று தமிழ்நாடு ஐக்கிய கிறிஸ்தவ கழகத்தின் சார்பில் கிறிஸ்தவர்கள் திரண்டு சென்று எடப்பாடி பழனிசாமியை சந்தித்து பேசினார்கள். அப்போது அவர்கள் எடப்பாடி பழனிசாமியிடம், "வருகிற 28ந் தேதி கருமத்தம்பட்டியில் நடைபெற உள்ள கிறிஸ்தவர்கள் உரிமை மீட்டெடுப்பு மாநாட்டில் கலந்து கொள்ள வரவேண்டும்" என்று கோரிக்கை விடுத்தனர்.

கிறிஸ்தவர்களின் இந்த கோரிக்கையை எடப்பாடி பழனிசாமி ஏற்றுக்கொண்டார். பாரதிய ஜனதாவிடம் இருந்து பிரிந்த பிறகு எடப்பாடி பழனிசாமியை கிறிஸ்தவர்கள் சந்தித்து பேசி இருப்பது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

இதைத் தொடர்ந்து மேலும் சில கிறிஸ்தவ அமைப்புகள் வரும் நாட்களில் எடப்பாடி பழனிசாமியை சந்தித்து பேச திட்டமிட்டுள்ளன. குறிப்பாக கத்தோலிக்க கிறிஸ்தவ அமைப்புகள் அ.தி.மு.க.வுடன் நெருங்கி வர தொடங்கி உள்ளன.

எடப்பாடி பழனிசாமி தமிழகம் முழுவதும் சூறாவளி சுற்றுப்பயணம் தொடங்குவதற்கு முன்பு கணிசமான அளவுக்கு இஸ்லாமிய, கிறிஸ்தவ அமைப்புகளை சந்தித்து ஆதரவை பெற்று விடுவார் என்று கூறப்படுகிறது.

# ஆசிரியையின் செருப்பை துடைக்கச் சொல்லி பள்ளி மாணவி அவமதிப்பா?

கோவை, நவ.23

கோவை மாவட்டம் துடியலூர் அசோகபுரம் பகுதியில் அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளி அமைந்து உள்ளது. இங்கு 250க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் படித்து வருகின்றனர்.

இந்த நிலையில் அந்த பள்ளியில் 7ம்வகுப்பு படிக்கும் மாணவி ஒருவர் தனது பெற்றோருடன் மாவட்ட முதன்மை கல்வி அதிகாரியை நேரில் சந்தித்து அவரிடம் புகார் மனு ஒன்றை கொடுத்திருந்தார்.

நான் சிறுபான்மை வகுப்பை சேர்ந்தவள். துடியலூர் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் 7ம்வகுப்பு படித்து வருகிறேன். இந்த நிலையில் எங்கள் பள்ளி வகுப்பு ஆசிரியை என்னிடம் அடிக்கடி மதரீதியாக விரோதம் காட்டி வருகிறார்.

மேலும் அவர் என்னை நேரில் வரவழைத்து அவரது செருப்பை துடைக்க சொல்லி வற்புறுத்தினார். இதற்கு நான் மறுத்து விட்டேன். எனவே ஆத்திரம் அடைந்த ஆசிரியை என்னை அவதூறாக பேசி தாக்க பாய்ந்தார். மேலும் என் தந்தை செய்யும் தொழில் குறித்து அவதூறாக பேசி ஏளனம் செய்தார்.

இது என்னை வெகுவாக பாதித்தது. மேலும் எனது கல்வித்திறனும் பாதிக்கப்பட்டு உள்ளது. எனவே நான் இதுகுறித்து பள்ளிக்கூட தலைமை ஆசிரியையிடம் நேரடியாக புகார் அளித்தேன். ஆனாலும் அவர் இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

எனவே கோவை மாவட்ட கல்வித்துறை உயரதிகாரிகள் இதுதொடர்பாக நேரடி விசாரணை நடத்தி சம்பந்தப்பட்ட ஆசிரியை மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அந்த புகார் மனுவில் கூறப்பட்டு உள்ளது.

மாணவி புகார் தொடர்பாக சம்பந்தப்பட்ட பள்ளிக்கு கோவை மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி பாலமுரளி இன்று நேரில் சென்று விசாரணை மேற்கொண்டார். மாணவி, தலைமை ஆசிரியை மற்றும் ஆசிரியைகளிடம் அவர் தனித்தனியாக விசாரித்தார்.

பள்ளி தலைமை ஆசிரியை கூறுகையில் மாணவியின் தரப்பின் அவரது பெற்றோர் அளித்தள்ள புகார் பொய்யானது. எதற்காக இந்த புகார் கொடுக்கப்பட்டது என்பது தெரியவில்லை. புகாரில் குறிப்பிட்டது போன்று எந்தசம்பவங்களும் இங்கு நிகழவில்லை என்றார்.

# வேப்பம்பட்டு ரெயில் நிலையத்தில் 3 பேர் பலியான இடத்தில் கலெக்டர் ஆய்வு



திருவள்ளூர், நவ.23

வேப்பம்பட்டு ரெயில் நிலையத்தில் கடந்த 19ந் தேதி தண்டவாளத்தை கடக்க முயன்ற தந்தை2 மகள்கள் மின்சார ரெயில் மோதி பலியானார்கள். இந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. ரெயில் நிலையத்தில் முடிக்கப்படாத சுரங்கநடைபாதை பணி மற்றும் மேம்பாலப்பணியே இந்த விபத்து ஏற்பட காரணம் என்று கூறி பொதுமக்கள் மறியல் போராட்டத்திலும் ஈடுபட்டனர். இந்தநிலையில் வேப்பம்பட்டு ரெயில் நிலையத்தில் 3 பேர் பலியான இடத்தில் திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் பிரபு சங்கர் ஆய்வு செய்தார். அப்போது வருவாய்த்துறை மற்றும் ரெயில்வே துறை அதிகாரிகளிடம் விபரங்களை கேட்டறிந்தார்.

அங்கிருந்த பயணிகள் மற்றும் பொதுமக்கள் கலெக்டர் பிரபு சங்கரிடம் கடந்த 10 ஆண்டுகளாக பாதியில் நிறுத்தப்பட்டுள்ள மேம்பால பணிகள் மற்றும் சுரங்கப்பாதை பணிகள் குறித்து சரமாரியாக குற்றம் சாட்டினர்.

இதைத் தொடர்ந்து கலெக்டர் பிரபு சங்கர் நிருபர்களிடம் கூறியதாவது:

வேப்பம்பட்டு ரெயில் நிலையத்தில் ஏற்கனவே பாதியில் நிறுத்தப்பட்டுள்ள சுரங்கப்பாதை பணிகள் முழுமையாக செய்வதற்கு நில எடுப்பு சம்பந்தமான அறிவுரைகள் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதே போல் ரெயில்வே நிர்வாகத்திற்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. மேம்பால பணிகள், ரெயில் நிலையத்தில் பணிகள் முடிவடையும் வரை தண்டவாளத்தை கடக்கும் பயணிகளுக்கு முன் எச்சரிக்கை செய்வதற்கு 24 மணி நேரமும் காவலர் ஒருவர் நியமிக்கப்படுவார்.

இதேபோல் மாவட்டத்தில் அனைத்து ரெயில் நிலையங்களிலும் மனித உயிரிழப்பு மற்றும் கால்நடைகள் உயிரிழப்புகளை தடுக்கும் வண்ணம் மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கும். சுரங்கப்பாதை அமைப்பதற்கு தனிநபரிடம் இருந்து நிலத்தை கையகப்படுத்துவதில் சற்று தாமதம் ஏற்பட்டுள்ளது. சுரங்கப்பாதை பணிகளுக்கு அதற்கான நில உரிமையாளரிடம் கலந்தாலோசித்து வருகிற 6 மாதத்திற்குள் சுரங்கப்பாதை பணிகள் முடிவடையும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

ஆய்வின்போது நெடுஞ்சாலை துறை கோட்ட பொறியாளர்கள் செல்வநம்பி, கணேசன், ரெயில்வே துறை கோட்ட பொறியாளர் ஜம்ஷீர், உதவி கோட்ட பொறியாளர் சரவணன் பவன், திருவள்ளூர் தாசில்தார் சுரேஷ் குமார் உடன் இருந்தனர்.

# திருப்பூரில் விடிய விடிய கொட்டித்தீர்த்த கனமழை: வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்ததால் பொதுமக்கள் பாதிப்பு

திருப்பூர், நவ.23

தமிழக கடலோர பகுதிகள் மற்றும் அதை ஒட்டிய தென்மேற்கு மத்திய மேற்கு வங்க கடல் பகுதிகளில் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நீடித்து வருவதால் தமிழகத்தின் பல்வேறு இடங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. திருப்பூர் மாநகர் மற்றும் மாவட்டத்தில் கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு மாலை மற்றும் இரவு நேரங்களில் மழை பெய்த நிலையில், கடந்த சில நாட்களாக மழை பெய்யவில்லை.

இந்தநிலையில் நேற்றிரவு 10 மணியளவில் திருப்பூர் மாநகர் பகுதியில் லேசான தூரலுடன் மழை பெய்தது. நேரம் செல்ல செல்ல பலத்த மழை பெய்தது. பயங்கர இடி, மின்னலுடன் இன்று காலை வரை விடிய விடிய மழை கொட்டி தீர்த்தது. இதன் காரணமாக சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான பகுதிகளில் குளம் போல் தண்ணீர் தேங்கியது. அதிகபட்சமாக திருப்பூர் கலெக்டர் முகாம் அலுவலக பகுதியில் 167 மி.மீ., மழை பெய்துள்ளது. திருப்பூர் வடக்கு தாலுகா அலுவலக பகுதியில் 60 மி.மீ., திருப்பூர் தெற்கு தாலுகா அலுவலக பகுதியில் 52 மி.மீ., கலெக்டர் அலுவலகம் பகுதியில் 37 மி.மீ., அவிநாசியில் 141 மி.மீ., ஊத்துக்குளியில் 65 மி.மீ. மழை பதிவாகி உள்ளது.

இந்த கனமழை காரணமாக திருப்பூர் மாநகரில் பல்வேறு இடங்களில் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக நெருப்பெரிச்சல் பகுதியில் அதிக அளவில் மழைநீர் தேங்கியது. இதை தொடர்ந்து மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜ் உத்தரவின் பேரில் அதிகாலையிலேயே அங்கு சென்ற வருவாய் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் தேங்கியிருந்த மழை நீரை துரிதமாக அப்புறப்படுத்தினர்.

இதேபோல் திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட 13 வது வார்டு காந்திநகரில் தாழ்வான பகுதிகளில் உள்ள வீடுகளில் மழைநீர் புகுந்தது. இதனால் அப்பகுதி பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகினர். இரவு முழுவதும் தூங்காமல் தவித்தனர். வீடுகளுக்குள் புகுந்த மழைநீரை பொதுமக்கள் வாளிகள் மூலம் இறைத்து வெளியேற்றினர்.

திருப்பூர் மும்மூர்த்தி நகர் பகுதியில் வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்தது. இதனால் வீட்டில் இருந்த பொது மக்கள் அங்குள்ள மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டனர். மேலும் அங்கு குடியிருப்பு பகுதி முழுவதும் தண்ணீர் தேங்கி உள்ளதால் பொது மக்கள் வீட்டில் இருந்து வெளியேற முடியாமல் உள்ளேயே முடங்கி உள்ளனர். திருப்பூர் காந்திநகர் பகுதியில் வீட்டில் சிக்கிய மூதாட்டி ஒருவரை வடக்கு தீயணைப்பு நிலைய வீரர்கள் மீட்டு கொண்டு வந்தனர்.

15 வேலம்பாளையம் பகுதியில் பெரியமரம் ஒன்று முறிந்து நடுரோட்டில் விழுந்தது. அதனை அகற்றும் பணியில் தீயணைப்பு வீரர்கள், மாநகராட்சி பணியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இரவு முழுவதும் கொட்டி தீர்த்த கனமழையால் மாநகர் பகுதியில் பல்வேறு இடங்களில் சாலைகள் பெயர்ந்துள்ளது. மேலும் சகதிக்காடாக மாறியுள்ளன. இதனால் அந்த வழியாக செல்லும் பொதுமக்கள் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர். திருப்பூர் காட்டன் மார்க்கெட், தென்னம்பாளையம் மார்க்கெட்டில் குளம் போல் தண்ணீர் தேங்கி கிடக்கிறது. இதன் காரணமாக வியாபாரிகள், பொது மக்கள் கடும் அவதி அடைந்து வருகின்றனர். மாநகர் முழுவதும் பல்வேறு இடங்களில் தேங்கியுள்ள மழைநீரை அகற்றும் பணியில் இன்று காலை முதலே மாநகராட்சி பணியாளர்கள் ஈடுபட்டனர். அப்பணிகளை மேயர் தினேஷ்குமார், மாநகராட்சி ஆணையாளர் பவன்குமார் கிரியப்பனவர் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்ததுடன் பணிகளை துரிதமாக முடிக்க உத்தரவிட்டனர்.

மேலும் அங்கு சுகாதார பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளது. கொசுக்களை ஒழிக்க புகை மருந்து அடிக்கும் பணி மற்றும் பிளீச்சிங் பவுடர் தெளிக்கப்பட்டு வருகிறது.

திருப்பூர் டி.எம்.எப். மேம்பாலத்தின் கீழ் தண்ணீர் குளம் போல் தேங்கியுள்ளது. இதனால் அந்த வழியாக போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது. மாநகரின் பல்வேறு இடங்களில் வீடுகளுக்குள் புகுந்த மழைநீரால் அங்கிருந்த பொருட்கள் அனைத்தும் தண்ணீரில் மூழ்கி சேதமடைந்தன. பல்லடம் பகுதியில் 15 மி.மீ., மழை பெய்துள்ளது. மாவட்டம் முழுவதும் 537 மி.மீ., மழை பதிவாகி உள்ளது. மாநகர் பகுதியில் மட்டும் அதிகபட்சமாக 17 செ.மீ., மழை பெய்துள்ளது. திருப்பூரில் கடந்த சில நாட்களாக வெப்பத்தின் தாக்கம் அதிகமாக இருந்த நிலையில் தற்போது பெய்த மழையால் வெப்பம் குறைந்து குளிர்ச்சி நிலவி வருகிறது. இன்று காலை மாநகர் பகுதியில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது.

திருப்பூர் மாவட்டம் ஊத்துக்குளி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் விடிய விடிய கனமழை பெய்தது. இதனால் ஊத்துக்குளி சாலையில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் வேலைக்கு செல்பவர்கள் மற்றும் அத்தியாவசிய தேவைகளுக்கு வெள்ளியம்பாளையத்திற்கு செல்பவர்கள் கடும் சிரமப்பட்டனர். சாலையில் இருசக்கர வாகனங்கள் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் மழைநீரில் ஊர்ந்து சென்றன. மேலும் அப்பகுதியில் குடியிருக்கும் குடிசை பகுதிகளில் மழைநீர் புகுந்தது. இதனால் மக்கள் விடிய விடிய தூங்காமல் மழைநீரை வெளியேற்றி கொண்டிருந்தனர். பின்னர் பொக்லைன் எந்திரம் வரவழைக்கப்பட்டு, நீரோடையை சரி செய்தனர். மேலும் சிவசக்தி நகரில் உள்ள குட்டைகளில் தண்ணீர் நிரம்பி, குளம் போல் காட்சி அளித்தது.

இதேபோல் ஊத்துக்குளி சாலையில் இருந்து விஜயமங்கலம், பெருந்துறை வரை ஆங்காங்கே உள்ள குட்டைகளில் மழைநீர் நிரம்பி வழிந்தது. மேலும் செங்கப்பள்ளி மற்றும் பெருமாநல்லூர், தொரவலூர் உள்பட அதன் சுற்றுவட்டார பகுதிகளிலும் மழை கொட்டியது. இதனால் அங்குள்ள நீர்நிலைகளும் நிரம்பின. செங்கப்பள்ளி, பெருமாநல்லூர் தேசிய நெடுஞ்சாலைகளில் நான்கு சக்கர வாகனங்களில் செல்பவர்கள் வாகனங்களை ஓட்டி செல்வதில் மிகவும் திணறினர். விடிய விடிய மழை கொட்டித்தீர்த்ததால் ஊத்துக்குளி, செங்கப்பள்ளி, பெருமாநல்லூர், பெருந்துறை ஆகிய சுற்று வட்டார பகுதிகளில் உள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# மாமல்லபுரம் சாலையில் சுற்றும் கால்நடைகளால் சுற்றுலா பயணிகள் அவதி



மாமல்லபுரம், நவ.23

மாமல்லபுரம் சர்வதேச சுற்றுலா தலமாக உள்ளது. இங்குள்ள வெண்ணை உருண்டை பாறை, கடற்கரை கோவில், அர்ச்சுனன் தபசு உள்ளிட்ட புராதன சின்னங்களை பார்க்க தினந்தோறும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகள் மற்றும் வெளிமாநிலங்கள், வெளிநாடுகளில் இருந்து சுற்றுலா பயணிகள் வந்து செல்கிறார்கள்.

பிரதமர் மோடி சீன அதிபர் சந்திப்பு, ஜி 20 மாநாடு மற்றும் செஸ் ஒலிம்பியாட் போட்டி, காற்றாடி திருவிழா, சர்பிங் உள்ளிட்ட சர்வதேச விளையாட்டு போட்டிகளும் இங்கு நடைபெற்றதால் தற்போது வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை பலமடங்கு அதிகரித்து உள்ளது. இதனால் இந்தியாவில் அதிகம் சுற்றுலா பயணிகள் வரும் இடமாக மாமல்லபுரம் மாறி உள்ளது.

இந்த நிலையில் மாமல்லபுரம் பகுதிகளில் முக்கிய வீதிகள் மற்றும் சாலைகளில் மாடுகள் ஹாயாக சுற்றி வருகின்றன. பூஞ்சேரி கூட்டுரோடு கிழக்கு கடற்கரை சாலை, கல்பாக்கம் சாலையோரம் கொட்டப்படும் உணவுக்கழிவுகளுக்காக மாடுகள், நாய்கள் கூட்டம் கூட்டமாக சுற்றி வருகின்றன. இதனால் மாமல்லபுரம் வரும் சுற்றுலா பயணிகள் கடும் அவதி அடைந்து வருகிறார்கள். மேலும் வாகனங்கள் செல்லும் போது திடீரென குறுக்கே செல்வதால் விபத்துக்களும் அவ்வப்போது நடந்து வருகிறது. இது குறித்து சுற்றுலா பயணிகள் தொடர்ந்து புகார் தெரிவித்து வந்தனர்.

இது தொடர்பாக செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர் ராகுல்நாத், சாலையில் சுற்றும் கால்நடைகளை கட்டுப்படுத்த பேரூராட்சி நிர்வாகத்திற்கு உத்தரவிட்டார். இதையடுத்து மாடுகள் பிடிக்கப்பட்டு, உரிமையாளர்களிடம் அபராதமும் வசூலிக்கபட்டது. தற்போது இந்த நடவடிக்கை தீவிரம் காட்டாமல் கிடப்பில் போடப்பட்டு உள்ளதால் மாடுகள் இரவிலும் பகலிலும் சுற்றி திரியும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சுற்றுலா பயணிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

இது குறித்து மாமல்லபுரம் பேரூராட்சி அதிகாரியிடம் கேட்டபோது,

மாடுகளை பிடித்து அடைக்க நிரந்தரமான பவுண்டு வசதிகள் பேரூராட்சியில் இல்லை.

அப்படி பல மாடுகளை பிடித்து அடைத்தால் அவற்றிற்கு உணவு ஏற்பாடுகள் செய்வதிலும் சிக்கல் வருகிறது. கூட்டமாக சுற்றும் மாடுகளை பிடித்து ஏற்றுவதற்கான வாகனம் இல்லை. மேலும் பணியாட்களும் பற்றாக்குறை உள்ளது. எனினும் சாலையில் சுற்றும் மாடுகளை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# வந்தே பாரத் ரெயில் சேவையை அதிகளவு பயன்படுத்திய திருச்சி கோட்ட பயணிகள்

திருச்சி: நவ.23

வந்தே பாரத் ரெயில் சேவையானது கடந்த 2019 பிப்ரவரி மாதம் 17ந்தேதி வர்த்தக ரீதியான தனது முதல் பயணத்தை தொடங்கியது. அதன் பின்னர் நாடு முழுவதும் தற்போது 25 வந்தே பாரத் ரெயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக கடந்த செப்டம்பர் மாதம் 21ந்தேதி சென்னை நெல்லை இடையே சோதனை ஓட்டம் நடைபெற்றது. இதனை தொடர்ந்து சென்னை நெல்லை இடையே வந்தே பாரத் ரெயில் சேவை செப்டம்பர் மாதம் 25ந்தேதி தொடங்கியது. அது முதல் கடந்த 16ந் தேதி வரை வந்தே பாரத் ரெயிலில் சென்னையில் இருந்து நெல்லைக்கு 28 ஆயிரத்து 480 பயணிகளும், நெல்லையில் இருந்து சென்னைக்கு 27 ஆயிரத்து 790 பயணிகளும் பயணித்து உள்ளனர். இந்த ரெயில் சேவையை திருச்சி கோட்ட ரெயில் பயணிகள் அதிகளவு பயன்படுத்தி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. வந்தே பாரத் ரெயில் சேவையை பயன்படுத்தி கொண்ட 56 ஆயிரத்து 270 பயணிகளில் 46 சதவீதம் பேர் திருச்சி ரெயில்வே கோட்டத்தை சேர்ந்தவர்கள் ஆவர். அதிலும் குறிப்பாக தீபாவளி விடுமுறை நாட்களில் பயணித்த 2018 பயணிகளில் 22 சதவீதம் பேர் திருச்சி கோட்டத்தை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

நமது தின கனி

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023 23.11.2023



## '80ஸ்களின் காதல் பாடல்' புதிய பாடலை வெளியிட்ட சந்தானம் படக்குழு..!

'குலேபகாவலி', 'ஜாக்பாட்' , 'கோஸ்டி' போன்ற படங்களை இயக்கிய கல்யாண் தற்போது இயக்கியுள்ள திரைப்படம் '80ஸ் பில்டப்'. இந்த படத்தில் சந்தானம் கதாநாயகனாக நடித்துள்ளார். ராதிகா பிரீத்தி கதாநாயகியாக நடித்துள்ளார். மேலும், கே.எஸ். ரவிகுமார், ஆனந்த் ராஜ், மன்சூர் அலிகான், மொட்டை ராஜேந்திரன், மனோபாலா, மயில்சாமி, முனீஸ்காந்த், கூல் சுரேஷ் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

ஸ்டுடியோ கிரீன் நிறுவனம் தயாரித்துள்ள இந்த படத்துக்கு ஜிப்ரான் இசையமைத்துள்ளார். ஜாக்கப் ரத்னராஜ் ஒளிப்பதிவு செய்துள்ளார். 80களில் நடக்கும் இந்தப் படத்தின் கதை, பேன்டசி டிராமாவாக உருவாகியுள்ளது. சமீபத்தில் இந்த படத்தின் டிரைலர் வெளியாகி கவனம் பெற்றது.

இந்த நிலையில் இந்த படத்தின் 'ஒட்டி வாறேனே' என்ற பாடலை படக்குழு வெளியிட்டுள்ளது. முத்தமிழ் எழுதியுள்ள இந்த பாடலை எஸ்.பி.சரண் பாடியுள்ளார். இந்த பாடல் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது. '80ஸ் பில்டப்' திரைப்படம் வருகிற 24ம் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது குறிப்பிடத்தக்கது.



## சமூக வலைத்தளத்தில் விஜய், அஜித் ரசிகர்கள் மோதல் அர்த்தமற்றது; டைரக்டர் மணிரத்னம்

சமூக வலைத்தளங்களில் யாரைப்பற்றியும், யாரும் பேசிவிடலாம் என்பதால் பலரும் விஷத்தை மட்டுமே கக்குகிறார்கள் என்று டைரக்டர் மணிரத்னம் கூறினார்.

தமிழ் சினிமாவின் முன்னணி டைரக்டரான மணிரத்னம், 'பொன்னியின் செல்வன்' படம் மூலம் மேலும் புகழ் பெற்றார். தற்போது கமல்ஹாசன்நடிக்கும் 'தக்லைப்' படத்தை இயக்கி வருகிறார்.

இந்தநிலையில் நிகழ்ச்சியொன்றில் பங்கேற்ற மணிரத்னம் பல்வேறு விஷயங்கள் குறித்து உரையாடினார். அவர் பேசும்போது, "ஒரு படம் டைரக்டு செய்யும்போது, சில காட்சிகள் ரொம்ப வீக்கா இருக்கு என்று நமக்கு தெரிந்துவிடும். ஆனால் எல்லாமே கற்றுக்கொள்வதற்காகத்தான் என்று நினைக்க வேண்டும். ஒரு படத்தில் விட்டதை, அடுத்த படத்தில் நிறைவாக கொடுக்கவேண்டும் என்பதே என் எண்ணம்.

சமூக வலைத்தளங்களில் யாரைப்பற்றியும், யாரும் பேசிவிடலாம் என்பதால் பலரும் விஷத்தை மட்டுமே கக்குகிறார்கள். எதிர்மறையான விஷயங்கள் மட்டுமே சமூக வலைத்தளங்களில் உலா வருகின்றன.

தென்மாவட்டங்களில் படத்தின் வசூலை யாரும் பார்ப்பதில்லை, கதையை பற்றிதான் யோசிக்கிறார்கள், விவாதிக்கிறார்கள் என்று சொல்வதை ஏற்கிறேன். ஆனால் சமூக வலைத்தளங்களில் ரசிகர்கள் தெரு சண்டை போடுவது கஷ்டமாக இருக்கிறது.

அஜித் விஜய் போன்ற நடிகர்களின் ரசிகர்கள், எனக்கு அஜித்தான் பிடிக்கும்... ஏய் எனக்கு விஜய்தான் பிடிக்கும்... என்று சண்டை போடுவது அர்த்தமற்றது. சமூக வலைத்தளங்களில் நல்ல கேள்விகளை எழுப்பும் பட்சத்தில் பல நல்லது நடக்கும். அதை பலரும் செய்வதில்லை என்பதுதான் வேதனை'', என்று குறிப்பிட்டார்.

## திருமணத்திற்கு பின்னும் பலருடன் டேட்டிங்; பிரபல நடிகை பேச்சால் சர்ச்சை


காபி வித் கரண் 8 என்ற நிகழ்ச்சி தொடராக வெளிவந்து கொண்டிருக்கிறது. இதன் முதல் எபிசோட்டில் பிரபல இந்தி நடிகை தீபிகா படுகோனே கலந்து கொண்டார். அவருடன் பிரபல நடிகர் மற்றும் அவருடைய கணவரான ரன்வீர் சிங்கும் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில், இருவருக்கும் இடையே பல விசயங்கள் ஒத்துபோவது பற்றி ரசிகர்கள் ஆவலாக பார்த்து கொண்டிருந்தபோது, முதன்முறையாக அவர்களுடைய டேட்டிங் வாழ்க்கையை பற்றிய விசயங்களையும் அவர்கள் பகிர்ந்து கொண்டது கடும் எதிர்விளைவை ஏற்படுத்தி உள்ளது.

இதில், படுகோனே பேசும்போது, ரன்வீரை சந்தித்த பின்னரும், பல ஆண்களுடன் டேட்டிங் சென்றிருக்கிறேன் என கூறினார். அப்போது ரன்வீர் மற்றும் படுகோனே இருவரும் ஒன்றாக, அந்த தருணத்தில் நாங்கள் ஒன்றாக இல்லை என தெரிவித்தனர்.

தீபிகா நிகழ்ச்சியில் கூறும்போது, நான் தனியாகவே இருக்க விரும்பினேன். ஏனெனில் அதுபோன்ற கடினம் வாய்ந்த உறவுகளில் இருந்து வந்தவள் நான். பற்று கொண்டவளாகவோ, உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் இருக்கவோ நான் விரும்பவில்லை.

ஆனால், மகிழ்ச்சியாகவே இருந்தேன். அப்போது அவர் வந்தபோதும், என்னிடம் காதலை தெரிவிக்கும் வரையும், நான் பெரிய அளவில் ஈடுபாடு காட்டவில்லை என்று ரன்வீரை குறிப்பிட்டு கூறினார். படுகோனேவின் டேட்டிங் பற்றிய பேச்சுக்கு சமூக வலைதளங்களில் பலரும் பல்வேறு விமர்சனங்களை வெளியிட்டு வருகின்றனர். எனினும், தீபிகா படுகோனேவின் இந்த பேச்சுக்கு நடிகர் வீர் தாஸ், நடிகை ட்விங்கிள் கன்னா ஆகியோர் ஆதரவு தெரிவித்து உள்ளனர். இதுபற்றி ட்விங்கிள் கன்னா அவருடைய பிளாக்கில் வெளியிட்ட செய்தியில், தீபிகா, நாட்டில் உள்ள மாமாக்கள், அத்தைகள் மற்றும் இந்தியாவில் இதுவரை திருமணம் ஆகாத நிறையபேரை கடுமையான கோபத்திற்கு ஆளாக்கியுள்ளார். அவர், திரைப்படத்தில் தன்னை சுற்றி, சுற்றி வரும் மீசை அரும்பிய நாயகனை பார்த்ததும் காதலில் விழுவது போன்று இல்லாமல் உண்மையை கூறியுள்ளார். உண்மையில் அவர், மற்றவர்களுடன் டேட்டிங் சென்றதுடன், வருங்கால கணவரையும் டேட்டிங் செய்துள்ளார். அவர் உண்மையை கூறியது பலருக்கும் குழப்பம் ஏற்படுத்தியுள்ளது என பதிவிட்டு உள்ளார்.




## ஓரின சேர்க்கையாளராக மம்மூட்டி..? ஜோதிகா நடித்துள்ள 'காதல் தி கோர்' படத்தை வெளியிட தடை

ஓரின சேர்க்கை உறவை ஊக்குவிக்கும் உள்ளடக்கம் இருப்பதால் கத்தார் மற்றும் குவைத் நாடுகளில் இந்த படத்தை வெளியிட தடை விதிக்கப்பட்டுள்ளது.

தமிழ் திரையுலகில் முன்னணி நடிகையான ஜோதிகா, தற்போது நடிகர் மம்மூட்டியுடன் 'காதல் தி கோர்' திரைப்படத்தில் நடித்துள்ளார். மம்மூட்டி கம்பெனி தயாரிக்கும் இந்த படத்தை மலையாளத்தில் சூப்பர் ஹிட்டான 'தி கிரேட் இந்தியன் கிச்சன்' படத்தை இயக்கிய ஜியோ பேபி இயக்கியுள்ளார்.

காதல் தி கோர் படத்தின் படப்பிடிப்பு கடந்த ஆண்டு நவம்பர் மாதம் முடிந்த நிலையில் வரும் டிசம்பர் மாதம் ஓடிடியில் வெளியாகும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் 'காதல் தி கோர்' திரைப்படம் வருகிற 23ந் தேதி திரையரங்குகளில் வெளியாகும் என படக்குழு கடந்த மாதம் அறிவித்தது. சமீபத்தில் இப்படத்தின் டிரைலர் வெளியாகி ரசிகர்களின் கவனத்தை ஈர்த்தது.

இந்நிலையில் ஓரின சேர்க்கை உறவை ஊக்குவிக்கும் உள்ளடக்கம் இருப்பதால் கத்தார் மற்றும் குவைத் நாடுகளில் இந்த படத்தை வெளியிட தடை விதித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த படத்தில் நடிகர் மம்மூட்டி ஓரின சேர்கையாளராக நடித்திருப்பதாக தகவல் கசிந்தது. இதன் காரணமாக இந்த படத்தை வெளியிட தடை விதிக்கப்பட்டுள்ளதாக ரசிகர்கள் தெரிவித்து வருகின்றனர். இதுகுறித்து படக்குழு தரப்பில் தற்போது வரை எந்த அறிவிப்பும் வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



## படத்துக்கு கதைதான் ஹீரோ வரலட்சுமி சரத்குமார்

கதாநாயகிக்கு முக்கியத்துவம் அளிக்கும் படங்களில் எனது கேரக்டர் பிடித்து இருந்தால் எப்படிப்பட்ட படத்திலும் நடிக்க தயாராக இருக்கிறேன் என்று வரலட்சுமி சரத்குமார் கூறினார்.

தமிழ், தெலுங்கு திரையுலகில் பிரபல நடிகையாக உயர்ந்துள்ளார் வரலட்சுமி சரத்குமார். வில்லி மற்றும் குணசித்திர வேடங்களிலும் நடித்து வருகிறார்.

இந்தநிலையில் ஐதராபாத்தில் வரலட்சுமி அளித்துள்ள பேட்டியில், "எனக்கு அதிகமாக போலீஸ் கதாபாத்திரங்கள்தான் கிடைக்கின்றன. தமிழில் நிறைய படங்களில் அது மாதிரியான வேடங்களில் நடித்து இருக்கிறேன். நான் நடிக்கும் ஒவ்வொரு படமும் வித்தியாசமான கதையம்சத்தில் இருக்கும். படங்களில் ரசிகர்களுக்கு புதுமையான விஷயங்களை கொடுக்கவேண்டும் என்று விரும்புகிறேன்.

ஒரு படத்துக்கு கதைதான் ஹீரோ என்று நம்புகிறேன். நல்ல கதாபாத்திரங்களில் நடிப்பதுதான் எனது நோக்கம். வரலட்சுமி வித்தியாசமான வேடத்தில் நடித்தார் என்று ரசிகர்கள் பாராட்ட வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

கதாநாயகிக்கு முக்கியத்துவம் அளிக்கும் படங்களில் எனது கேரக்டர் பிடித்து இருந்தால் எப்படிப்பட்ட படத்திலும் நடிக்க தயாராக இருக்கிறேன். பொங்கலுக்கு நான் நடித்த ஹனுமான் படம் ரிலீசாக இருக்கிறது. கன்னடத்தில் சுதீப்புடன் இணைந்து மேக்ஸ் படத்தில் நடிக்கிறேன். மேலும் சில படங்களும் கைவசம் உள்ளன'' என்றார்.



## 'இந்திய சினிமாவுக்கான சிறந்த அடையாளம்'... நடிகை மாதுரி தீட்சித்துக்கு சிறப்பு விருது...!

இந்திய அரசு சார்பில் ஒவ்வொரு ஆண்டும் கோவாவில் இந்திய சர்வதேச திரைப்பட விழா நடத்தப்பட்டு வருகிறது. இந்த விழாவானது உலகளவில் நடத்தப்படும் 14 மதிப்புமிக்க திரைப்பட விழாக்களில் ஒன்றாக திகழ்கிறது. இந்த ஆண்டுக்கான 54வது சர்வதேச திரைப்பட விழா நேற்று கோவாவில் பிரமாண்டமாக தொடங்கியது.

விழாவின் தொடக்க நிகழ்ச்சியில் மாதுரி தீட்சித், ஷாகித்கபூர், ஸ்ரேயாசரண், ஸ்ரேயாகோஷல் உள்ளிட்ட பல திரைபிரபலங்கள் பங்கேற்றனர்.

அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. 4 இடங்களில் மொத்தம் 9 நாட்கள் நடைபெற உள்ள இந்த பிரமாண்ட விழாவில், 270க்கும் மேற்பட்ட படங்கள் திரையிடப்பட உள்ளதாகவும்,

அதில் 89 இந்திய திரைப்படங்கள், 62 ஆசிய திரைப்படங்கள், 10 சர்வதேச திரைப்படங்கள், 13 உலக திரைப்படங்கள் திரையிட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று நடந்த 54வது சர்வதேச திரைப்பட விழாவின் தொடக்க நிகழ்ச்சியில் 'இந்திய சினிமாவுக்கான சிறந்த அடையாளம்' என்ற சிறப்பு விருது பாலிவுட் நடிகை மாதுரி தீட்சித்துக்கு வழங்கப்பட்டது.

40 ஆண்டுகளாக இந்திய சினிமாவில் தொடர்ந்து தனது பங்களிப்பை நடிகை மாதுரி தீட்சித் வழங்கி வருகிறார்.

அவரை கவுரவிக்கும் விதமாக 'இந்திய சினிமாவின் சிறந்த அடையாளம்' என்ற சிறப்பு விருதை மத்திய மந்திரிகள் அனுராக் தாகூர், எல். முருகன் வழங்கி பாராட்டினர்.




## டி20 தொடரில் விளையாடுவதற்காக இந்தியா வரும் ஆப்கானிஸ்தான் அணி

இந்தியாவில் நடைபெற்ற 50 ஓவர் உலகக்கோப்பை தொடரில் இந்திய அணியை வீழ்த்தி ஆஸ்திரேலியா சாம்பியன் பட்டம் வென்றது.

கடந்த அக்டோபர் 5 ஆம் தேதி தொடங்கி 7 வார காலங்களாக நடைபெற்ற 50 ஓவர் உலகக்கோப்பை கிரிக்கெட் திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமையுடன் நிறைவு பெற்றது. இதில் ஆஸ்திரேலிய அணி 6வது முறையாக உலகக் கோப்பையை வென்றது.

இதனைத்தொடர்ந்து இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான 5 போட்டிகள் கொண்ட டி20 தொடர் வரும் நவம்பர் 23ஆம் தேதி நடைபெற உள்ளது.

இந்நிலையில் இந்தியாஆப்கானிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று டி20 போட்டிகள் கொண்ட தொடர் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஜனவரி 11ஆம் தேதி மொகாலியிலும், 14ஆம் தேதி இந்தூரிலும், 17ஆம் தேதி பெங்களூருவிலும் நடைபெற உள்ளன.

உலகக் கோப்பை தொடர் முழுவதும் சிறப்பாக விளையாடிய வளர்ந்து வரும் ஆசிய அணிகளில் ஒன்றான ஆப்கானிஸ்தான் மிகச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. விளையாடிய ஒன்பது போட்டிகளில் நான்கு போட்டிகளை வென்று அசத்தியது. பலம் வாய்ந்த பாகிஸ்தான் அணியை வீழ்த்தி அதன் அரையிறுதி வாய்ப்பை தவிடு பொடியாக்கியது.

ஐசிசி மற்றும் ஏசிசி போட்டிகளுக்கு வெளியில் இந்தியாவும் ஆப்கானிஸ்தானும் ஒயிட்பால் கிரிக்கெட்டில் ஒருவரையொருவர் எதிர்த்து விளையாடியதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 2018ஆம் ஆண்டு இரு அணிகளும் ஒரே ஒரு டெஸ்ட் போட்டியில் மோதின.

## உலகக்கோப்பை கால்பந்து தகுதி சுற்று: இந்திய அணியை வீழ்த்தி கத்தார் அணி வெற்றி

ஆண்களுக்கான உலகக்கோப்பை கால்பந்து தொடர் 2026ஆம் ஆண்டில் நடைபெற உள்ளது. அதற்கான ஆசிய மண்டல தகுதி சுற்றின் 2வது சுற்றில் 36 அணிகள் பங்கேற்று உள்ளன. அவை 9 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு தங்களுக்குள் தலா 2 முறை லீக்கில் மோதுகின்றன. இதன் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் 2 இடங்களை பிடிக்கும் அணிகள் 3வது சுற்றுக்கு முன்னேறும். 2வது சுற்று ஆட்டங்கள் பல்வேறு நாடுகளில் நடைபெறுகின்றன. இந்தியா 'ஏ' பிரிவில் கத்தார், குவைத் மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகளுடன் இடம்பெற்றுள்ளது. இதில் நடைபெற்ற முதல் ஆட்டத்தில் சுனில் சேத்ரி தலைமையிலான இந்திய அணி குவைத் அணியை 10 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி வெற்றி பெற்றது.





இந்நிலையில் இந்திய அணி தனது 2வது ஆட்டத்தில் பலம் வாய்ந்த கத்தார் அணியுடன் இன்று மோதியது . ஆட்டத்தின் 4வது நிமிடத்தில் கத்தார் அணியின் டெரெக் மெஷல் கோல் அடித்தார். இதனால் முதல் பாதி முடிவில் கத்தார் அணி 10 என முன்னிலை பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற 2வது பாதி ஆட்டத்தில் 47வது நிமிடத்தில் கத்தார் அணியின் அல்மோஸ் அலி, 86வது நிமிடத்தில் யூசுப் அப்தரிசாக் கோல் அடித்தனர்.

இந்த ஆட்டத்தில் போராடியும் இந்திய அணியால் கோல் அடிக்க முடியவில்லை. இதனால் 30 என கத்தார் அணி வெற்றி பெற்றது.

## 13வது தேசிய சீனியர் ஆக்கி: 4ம் நாள் முடிவுகள்

13வது தேசிய சீனியர் ஆக்கி சாம்பியன்ஷிப் போட்டி சென்னை எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் நடந்து வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 28 அணிகள் 8 பிரிவாக பிரிக்கப்பட்டு லீக்கில் மோதுகின்றன.

4வது நாளான நேற்று நடந்த ஆட்டம் ஒன்றில் கர்நாடக அணி 121 என்ற கோல் கணக்கில் பீகாரை வீழ்த்தியது. மற்ற ஆட்டங்களில் உத்தரகாண்ட் 50 என்ற கோல் கணக்கில் திரிபுராவையும், மணிப்பூர் 151 என்ற கோல் கணக்கில் ஜம்முகாஷ்மீர் அணியையும், பெங்கால் 31 என்ற கோல் கணக்கில் மத்திய பிரதேசத்தையும், ஆந்திரா 31 என்ற கோல் கணக்கில் கோவாவையும் வீழ்த்தி வெற்றி பெற்றன.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.